




சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல்
மற்றும் கழிவு நீரகற்று வாரியம்
பகுதி - 07, அம்பத்தூர்
குடிநீர் / கழிவுநீர்
இணைப்பு பெறுவதற்கான
சிறப்பு முகாம்
நாள் : 27.09.2018
இடம் : பிள்ளையார் கோவில் தெரு, கள்ளிக்குப்பம் ஆர்ச் உட்புறம்,
அம்பத்தூர், சென்னை - 600053.

செய்தி வெளியீடு எண்.54/2018 நாள் 28.9.2018

## அம்பத்தூரில் குடிநீர், கழிவுநீர் இணைப்பு பெற சிறப்பு முகாம் – சென்னை குடிநீர் வாரியம் தகவல்

-----

சென்னை அம்பத்தூர் திருவேங்கடம் நகரில் 27.10.2018 சனிக் கிழமை காலை 10.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு பெறுவதற்கான சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது. திருவேங்கடம் நகர் பொது மக்களின் கோரிக்கையினை ஏற்று இந்த சிறப்பு முகாம் நடைபெறும் என சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் டாக்டர். த.பிரபுசங்கர், இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களிடம் உறுதி அளித்தார்.

நேற்று (27.09.2018) அம்பத்தூர் கள்ளிக்குப்பம் பிள்ளையார் கோயில் தெருவில் குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு பெறுவதற்கான சிறப்பு முகாம் நடைபெற்றது. வாரிய பணிமனைகள் 79, 80. 81, 82 மற்றும் 85 பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று இந்த சிறப்பு முகாமிற்கு சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இணைப்பு பெற விரும்புவோர் இந்த சிறப்பு முகாமினை பயன்படுத்தி விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ளலாம் என அப்பகுதி மக்களிடம் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த சிறப்பு முகாமில் 55 விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டன. சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் டாக்டர். த.பிரபுசங்கர், இ.ஆ.ப., அவர்கள் நேரடியாகச் சென்று விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முறைகளைக் கண்காணித்ததோடு பொதுமக்கள் விண்ணப்பங்களை எளிதாக பூர்த்தி செய்வதற்கும் தகுதியான விண்ணப்பங்களுக்கான பதிவுத் தொகையினை அங்கேயே பெறுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தார்கள்.

தங்கள் கோரிக்கையினை ஏற்று சிறப்பு முகாம் நடத்தியதற்கு அப்பகுதி பொதுமக்கள் தங்களது மகிழ்ச்சியினையும் நன்றியுனையும் சென்னை குடிநீர் வாரியத்தின் செயல் இயக்குநர் அவர்களுக்கு தெரிவித்ததோடு அம்பத்தூரில் மற்ற பகுதிகளில் வாழும் பொதுமக்களும் பயன்பெறக் கூடிய வகையில் இது போன்ற சிறப்பு முகாம்களை மேன்மேலும் நடத்த வேண்டும் என கோரிக்கையினையும் வைத்தார்கள்.

அவர்களுடைய கோரிக்கையினை ஏற்றுக் கொண்டு 27.10.2018 (சனிக் கிழமை) அன்று திருவேங்கடம் நரில் சிறப்பு முகாம் நடத்துவற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு குடிநீர் வாரிய அலுவலர்களுக்கு செயல் இயக்குநர் டாக்டர். த.பிரபுசங்கர், இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தி உள்ளார்கள்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர்